**<u>சார்பு நீதிமன்றம், அவிநாசி</u>**

**<u>OS – 476/2016</u>**

நாள் 02.07.2025

DW1 – வெங்கடாசலம்

த/பெ – லேட்.பெரிய முருகப்ப கவுண்டர்

**Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 02nd day of July 2025.)**

**<u>குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>**

1. சர்வே எண்.54/2–ல் உட்பிரிவு 2A3–ல் நான் பட்டா வாங்கி வைத்ததாக சொல்லியுள்ள நிலையில் மற்ற உட்பிரிவுகளான சர்வே எண்.54/2A2, 54/2A4 உட்பிரிவுகளில் கண்ட சொத்துக்களில் எனக்கு பாத்தியமில்லை என்று சொல்கிறேன் என்றால் சரியல்ல, மேற்படி 3 உட்பிரிவுகளிலும் பாத்தியமிருக்கிறது. என்னிடம் காட்டப்படும் பி.வா.சா.ஆ.11 வரைபடத்தில் சர்வே எண். 54/ 2A3–க்கு மேல்புறமாக சர்வே எண்.58 உள்ளது என்றால் சரிதான். அதேபோல் சர்வே எண். 49/3–ல் வடபுறம் உள்ள இரண்டு உட்பிரிவுகளை தவிர மற்ற உட்பிரிவுகளில் பாகம் இருக்கிறதா? என்றால் எல்லா உட்பிரிவுகளிலும் பாகம் இருக்கிறது. பி.வா.சா.ஆ.18 பட்டாவின் மூலம் சர்வே எண்.49/3A1–ல் 32 சென்ட்டும், சர்வே எண்.49/3B1–ல் 72 சென்ட்டும் பாத்தியமிருப்பதாக சொல்கிறேன் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள பி.வா.சா.ஆ.1 கிரைய பத்திரப்படி எனது தகப்பனார் பெரிய முருகப்ப கவுண்டர் புதுப்பாளையம் கிராமத்தில் சர்வே எண்.49/3, 54/1, 54/2, 55/2, 56/2, 57/3, 57/4 ஆகிய 7 காலைகளில் மொத்தம் 6.95–1/2 ஏக்கர் சொத்தை அவரது சகோதரர் கந்தசாமி கவுண்டரிடமிருந்து கிரையம் பெற்றுள்ளார் என்றால் சரிதான்.

அந்த கிரைய ஆவணத்தின் பேரில் எனது அப்பா பாகப்பிரிவினை கோரி அ.வ.எண்.264/1962 வழக்கை திருப்பூர் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்து அதில் தீர்ப்பு ஏற்பட்டது என்றால் சரிதான். அந்த வழக்கு ஆவணங்களின் நகல்களை வாங்கி வைத்துள்ளேன் என்றால் சரிதான். அந்த பாக தாவாவில் நீதிமன்ற ஆணையர் வந்து சொத்தை அளவீடு செய்து பாகம் பிரித்து ஆணையர் அறிக்கை மற்றும் வரைபடத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்தார் என்றால் சரிதான். அந்த அறிக்கை மற்றும் வரைபடத்தின் நகல் என் வசம் உள்ளது என்றால் சரிதான். அதை நான் இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அந்த ஆணையர் அறிக்கை மற்றும் வரைபடத்தில் சர்வே எண்.49/3 ஆனது சர்வே எண். 49/3A, 49/3B, 49/3C, 49/3D என்று நான்கு பாகமாக பிரித்து காட்டியுள்ளார்கள் என்றால் அது எனக்குத் தெரியாது. அந்த விபரம் எனக்கும் நன்கு தெரிந்திருந்தும் வழக்கிற்காக வேண்டி தெரியாது என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. அந்த ஆணையர் அறிக்கை மற்றும் வரைபடத்தை இந்த வழக்கில் தாக்கல் செய்தால் அதில் கண்டுள்ள சொத்துக்கள் வேறு, இந்த வழக்கில் கண்டுள்ள சொத்துக்கள் வேறு என்ற விபரம் தெரிந்து விடும் என்பதால் தான் நான் அதை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

2. நான் தாக்கல் செய்துள்ள பி.வா.சா.ஆ.3 சுவாதீன ரசீதில் 2–ம் பக்கத்தில் சர்வே எண்.49/3 பாகத்தினை பிரிவினை செய்து 49/3A பாகத்தில் 1.27 ஏக்கர் சொத்தை சுவாதீனம் கொடுத்துள்ளதாக குறிப்பிட்டு சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த ரசீதின் 3–ம் பக்கத்தில் 49/3A காலைக்கு மேல்புறமாக சர்வே எண்.56 காலையும், தென்புறமாக சர்வே எண்.50 காலையும், கிழபுறமாக சர்வே எண்.49/3B காலையும் என்று

செக்குபந்தி கண்டுள்ளது என்றால் சரிதான். சர்வே எண்.49/3 ஆனது சர்வே எண்.49/3A, 49/3B, 49/3C, 49/3D என்று தென்வடல் நீளியாக பிரிக்கப்பட்டு அதில் மேல்புறமாக எனது அப்பாவிற்கு சர்வே எண்.49/3A பாகமாக ஒதுக்கி கொடுக்கப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. நான் சொல்வது பொய் என்றும், மேற்படி வீதம் எனது அப்பாவிற்கு சர்வே எண்.49/3A சொத்தை பாகமாக ஒதுக்கிக் கொடுக்கப்பட்டதாக தான் நான் தாக்கல் செய்துள்ள சுவாதீன ரசீதில் குறிப்பிட்டு சொல்லப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையில் பாரா எண்.4–ல் எனது தகப்பனாருக்கு சர்வே எண்.49/3A பாகமாக 1.27 ஏக்கர் ஒதுக்கப்பட்டதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். அதேபோல் சர்வே எண்.56/2 காலையை 56/2A, 56/2B, 56/2C, 56/2D என்று 4 உட்பிரிவுகளாக பிரிக்கப்பட்டு அதில் எனது தகப்பனாருக்கு சர்வே எண்.56/2A உட்பிரிவான 94 சென்ட்டை பாகமாக ஒதுக்கி கொடுத்துள்ளார்கள் என்றால் சரிதான். அந்த 94 சென்ட் இடத்திற்கு கிழபுறமாக தான் சர்வே எண்.49 உள்ளது என்றால் சரிதான். அதேபோல் சர்வே எண்.54 காலையானது 54/2A, 54/2B என்று உட்பிரிவு செய்து அதில் சர்வே எண்.54/2B–ல் 59 சென்ட்டை எனது அப்பாவிற்கு பாகமாக ஒதுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த சர்வே எண். 54/2A, 54/2B ஆனது தென்வடல் நீளியாக தான் பிரிக்கப்பட்டது என்றால் சரிதான். அந்த 59 சென்ட்டுக்கு கிழபுறமாக சர்வே எண்.59/3 காலையும், தென்புறமாக சர்வே எண்.53 காலையும் உள்ளது என்றால் சரிதான்.

**(குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக வேண்டி ஒத்திவைக்கப்படுகிறது)**

**Take down by/before me in open court read over/interpreted to the witness in the presence of the accused/accused's pleader and admitted by the witness to be correct.**

C SENTHIL KUMAR

Digitally signed by C SENTHIL KUMAR
Date: 2025.07.02 16:19:08 -0100

**Subordinate Judge,**
**Avinashi.**